**பேருவளை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஆகஸ்ட் 02 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவளை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியப் பணிப்பாளர் நயகத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,628,090 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன வருமானம் ரூபா 161,258 இனாலும், பெறவேண்டிய கைத்தொழில் உதவித் தொகை ரூபா 815,171 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 276,706 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 1,720,811 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | 50 கழிவுப் பொருள் பாத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பபட்ட ரூபா 245,000 தொகை மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | தளபாடமும் பொருத்தியும் மற்றும் அலுவலக உபகரணப் பட்டோலையில் 2016 இல் ஏற்பட்ட தவறை திருதுவதற்காக ரூபா 37,500 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | ஓலிபரப்பு முறைமையை ஸ்தாபிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,021,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில் லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | பிரதேச சபையின் பணிகளை கணனிமயப்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,645,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில் லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | மக்கொன பொதுச் சந்தையை விரிவுபடுத்துவதற்காக காணியை கையேற்கும்போது இழப்பீடாக பேருவளை பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 11,000,000 வைப்புத் தொகை முற்பணமாக கணக்கீடு செய்யப்படாமல் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் காணியைக் கையேற்கும் நடவடிக்கைகளுக்கான நிர்வாகச் செலவினமாக செலுத்தப்பட்ட ரூபா 300,000 தொகையும் முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்படாமல் மூலதன செலவினத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (x) | கம்பெக்டர் வாகனத்தின் தவணைப் பணமாக ரூபா 2,983,500 தொகையொன்று கணக்குகளில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 994,500 ஆக சீராக்கப்பட்டமையின் காரணமாக பயன்பாட்டுச் சேவைகள் கணக்கும் மாகாண சபை கம்டபெக்டர் வாகனக் கணக்கும் ரூபா 1,989,000 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 1,373,537 தொகையான 02 கணக்கு விமடயங்களுக்குரிய மீதிக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 103,420 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணனிமயப்படுத்தும் போது ஏற்பட்ட குறைபாடுகளைச் சரிசெய்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்படும். |

(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உரித்தை உறுதிப்படுத்துகின்ற உரித்துறுதிகள் அல்லது கையளித்தல் கட்டளை, மெய்மையாய்வு அறிக்கை, பெறவேண்டிய முத்திரைக் கட்டணப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் இன்மையினால் ரூபா 304,063,936 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | | | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சுபைக்குச் சொந்தமான சகல காணியும் கட்டிடங்களும் ஆண்டிற்கு ஒருமுறையேனும் பரீட்சிப்பிற்கு எட்படுதத்ப்படடிருக்கவில் லை. | பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சகல காணி மற்றும் கட்டிடங்களை பரீட்சிப்பிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 104 | - | டெக்டருக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய வாகன விபத்து தொடர்பாக பரீட்சித்து அறிக்கையொன்றை வழங்குமாறு உள்ளகக் கணக்காய்வு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 | - | 33 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் சகல வாகனங்களுக்காகவும் எரிபொருள் எரிவு பரீட்சிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பிரிவு | 2,420,000 | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது உரிய தகைமைகள் தொடர்பாக பரீட்சிக்காமல் ஒப்பந்தங்கள் கையளிக்கப் பட்டிருந்தன. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,032,903 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,699,159 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 18,510,508 | 23,988,856 | 11,632,353 | 12,356,503 | 15,266,375 | 17,403,708 | 18,873,253 | 12,902,511 |
| (ii) | வாடகை | 19,077,408 | 20,102,792 | 16,703,957 | 3,398,835 | 25,834,430 | 15,282,815 | 15,682,994 | 3,139,393 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,142,500 | 4,716,131 | 4,602,131 | 114,000 | 4,400,630 | 4,263,287 | 4,253,287 | 10,000 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (iv) | ஏனைய வருமானம் | 50,600,000 | 50,600,000 | 42,149,902 | 85,818,970 | 53,992,495 | 44,000,000 | 46,506,665 | 79,622,624 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்திலுள்ள நிலுவை ஆதனவரி மீதியில் 71 சதவீதம் ஆண்டின் இறுதிரையிலும் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் வருடாந்த சிட்டையிடலில் 52 சதவீதமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. நிலுவை ஆதன வரி மீதியில் 05-10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,224,731 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 356,615 ஆக இருந்ததுடன் நிலுவை மீதியில் ரூபா 10,000 இனை விஞ்சிய 127 அலகுகளும் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 07 அலகுகளும் காணப்பட்டன. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதனவரி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) வியாபார வரி | | |
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள மொத்த நிலுவை வியாபார வரி ரூபா 872,460 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்குக் குறைவான நிலுவை ரூபா 577,100 தொகையும், 01-03 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 203,360 தொகை மற்றும் 03-05 வருடங்களுக்கிடையிலான | நிலுவை வியாபார வரி அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. |

நிலுவை ரூபா 92,000 ஆகவும் இருந்தன.

(இ) கடை வாடகை

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 3,081,150 தொகையான நிலுவை கடை வாடகை மீதியில் 57 சதவீதம் அறவிடவேண்டியதாகக் காணப்பட்டுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவைக் கடை வாடகை மீதியான ரூபா 3,598,900 தொகையில் 01-03 வருடங்களுக்கு இடையிலான காலத்திற்குரிய ரூபா 681,347 தொகை மற்றும் 03-05 வருடங்களுக்கு இடையிலான காலத்திற்குரிய ரூபா 1,749,802 ஆக இருந்தன. | நிலுவை கடை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | தற்போது காணப்படுகின்ற 11 கடைகளுக்காக சித்தாசி அனுப்பபபட்டுள்ளது. உடன்படிக்கையில்லாத கடைகளின் சிட்டையிடல்களும் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலுவை காணப்படுகின்ற உடன்படிக்கை உள்ள கடைகளுக்காக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) ஏனைய வருமானம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலுவையான ரூபா 1,645,225 தொகையில் 01-03 வருடங்கள் வரையான காலத்திற்குரிய நிலுவை ரூபா 47,500 ஆகும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

(உ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| | | |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 21,007,602 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 64,811,368 தொகை ஆகும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **உப விதிகள்** | | |
| | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் 10 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாலம் உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | மிகுதி விடயங்களுக்காக உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) | 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக கட்டுநிதி தேவை தீர்மானிக்கப்பட்டு கட்டுநிதித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை . | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் கட்டு நிதித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கான 05 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 157 செயற்பாடுகள் இனங்காணப்பட்டு அதற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்ட போதிலும் அதன் செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக பொருத்தமற்ற மிகவும் வளைவுடன் கூடிய இரண்டு காணிக்கூறுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் கிடைத்த இன்னும் மூன்று காணிக் கூறுகளும் எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொது வசதிகளுக்காக நிலக் கூறுகளை பெற்றுக் கொள்ளும் போது பொருத்தமான நிலப் பகுதி பெறவேண்டியிருந்ததுடன் அவை உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | புதிலளிக்கபடவில்லை. |
| (ஆ) | அரச சார்பற்ற அமைப்பின் நிதியுதவியின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது அளுத்கம வாராந்த சந்தை காணப்படுகின்ற இடத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட 38 கடைகளில் 2019 மே 29 ஆந் திகதி வரையில் 03 கடைகள் மாத்திரமே திறக்கப்பட்டிருந்தது. வீதிப் பக்கம் திறக்கக்கூடியதாக திட்டமிடப்படாமையினால் கடைகளை வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்பாடாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதிர்காலத்தில் மேற்கெள்ளப்படுகின்ற நிர்மாணங்களுக்காக சரியான பிரகாரம் திட்டமிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கெள்ளப்படும். |
| (இ) | சபையினால் ரூபா 570,000 தொகை செலவில் 06 கைவிரல் அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கான மாதிரிகள் தயாரிக்கப்படாமல் 275 உத்தியோகத்தர்களுக்காக 8000 இயலளவுடைய கைவிரல் அடையாள இயந்திரம் கொள்வனவு | தேவையின் பிரகாரம் தரமானதும் நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும் | மதிப்பீட்டுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் சிபாரிசின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும். மின்னல் தாக்கியமையால் இயந்திரம் செயலிழந்திருந்தது. பழுதுபார்க்க முடியாத இரண்டு இயந்திரங்கள் மீளக் கொள்வனவு செய்யப்படும். |

செய்ய்பட்டிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | **ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை** | | |
| (அ) | 10 பதவிகளில் 34 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சந்தையின் பரீட்சகர் பதவியில் ஒருவரும் மற்றும் அமைய, தற்காலிக, ஒப்பந்த ஊழியர்களில் ஐம்பது பேரும் மிகையாகக் காணப்பட்டனர். | அந்த நிலைமை தொடர்பாக ஆராய்ந்து கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொரு பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள சேவைத் தேவையின் அடிப்படையில் மேலதிக ஊழியர்களை சேர்க்க வேண்டியேற்பட்டிருந்தது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 ஏக்கர் 3.41 பேர்ச் அளவான ஹல்கந்தவில கொன்னகஹவத்த காணி கூறிட்டு விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்கான காணிப்பகுதி சபைக்கு வழங்கப்பட்டிருக்வில்லை. | பொது வசதிகளுக்காக பகுதி ஒதுக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட வேண்டும் | பொது நிலப் பகுதிகளுக்குரிய பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 2018 ஆம் ஆண்டில் கிடைத்த கவஸிமா கூட்டுப்பசளை இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது. | பழுதுபார்த்து உரிய பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். | காலி மாநகர சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 42 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி ரூபா 3.10 மில்லியன் தொகையான 03 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் தயாரித்து அங்கீகாரம் பெறப்படவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பித்தற்கு முன் நிர்மாணங்கள் வடிவமைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும் | அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | நிர்மாணிக்கப்பட்ட 03 வீதிகளின் வேலை விடயத்தின் படி பயன்படுத்த வேண்டிய விலை வீதத்திற்கு மேலுள்ள விலை வீதம் பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 118,850 தொகை மேலதிகமாக ஒப்பந்தகார சங்கத்திற்கு செலுத்ப்பட்டிருந்தது.டமையால் | வீதி கட்டண பட்டோலையில் குறிப்படப்பட்ட விலை வீதம் பயன்படுத்தப்பட வேண்டும் | ஒப்பந்தகார சங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணமத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 வழங்கல் மற்றும் சேவை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை பிரதான அலுவலகம் மற்றும் 05 உப அலுவலகங்களின் செயற்பாடுகளை கணனி வலைப்பின்னல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,645,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. பணம் செலுத்தி ஒரு வருடமும் 02 மாதங்களும் கடந்திருந்த போதிலும் கணனி வலைப்பின்னல்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | உரிய கணனி வலைப்பின்னல் மேற்கொண்டு செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கழிவுப் பொருட்களை மூடுவதற்காக பயன்படுத்தப்படும் மண்ணைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,023,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் முதல் 04 மாதத்தில் சராசரியாக நாளொன்றிற்கு 22 மண் கியூப்கள் வீதமும், இறுதி மாதங்களில் சராசரியாக நாளொன்றிற்கு 13 மண் கியூப்கள் வீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தது. முதல் ஆரம்ப மாதங்களில் நாளொன்றிற்கு 09 மண் கியூப்கள் மேலதிகமாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட மண்ணின் அளவிடைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்பட்ட மண்ணிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வை மற்றும் அளவிடை பெறப்பட வேண்டும். | அசாதாரணமாக அதிகரித்த கழிவுகளை பரவலாக்குவதற்காக மேலதிக மண் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |